DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.208/2025**

Deposition of witness for Prosecution அ.சா.1

| | | |
|---|---|---|
| பெயர் | : | சந்திரசேகர் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | ராஜேந்திரன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 05.03.2026

எதிரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.03.2025 ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணிபுரிந்தபோது நானும் முதல்நிலைக்காவலர் 1986 முத்துக்குமார் மற்றும் சார்பு ஆய்வாளர் ஜெயபாலன் ஆகியோர்கள் ரோந்து பணிக்கு சென்றபோது கிடைத்த இரகசிய தகவலின்படி உதையாட்சி விளக்கு அருகே சென்று பார்த்தபோது ஒருவர் சாக்குப்பையுடன் நின்று கொண்டிருந்தார். அந்த சாக்குப்பையை பார்த்தபோது அதில் 180 மில்லி அளவுள்ள

express brandy 7 பாட்டில்கள் இருந்தது. அவரை விசாரித்தபோது தனது பெயர் ரமேஷ், வயது 46, த.பெ.ராமன், உதையாட்சி, தேவகோட்டை தாலுகா என்று கூறினார். மேலும் அந்த பிராண்டி பாட்டில்களை நேற்றே வாங்கி இன்று அதிக விலைக்கு லாபம் கருதி விற்பனை செய்ய வைத்திருந்ததாக சொன்னார். 7.40 மணிக்கு கைது காரணம் கூறி கைது செய்து அருகில் சாட்சிகள் யாரும் இல்லாததால் என்னையும் முதல்நிலைக்காவலர் 1986 யும் சாட்சியாக வைத்து கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து மேற்படி பிராண்டி பாட்டில்களை சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து அ.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்பு எதிரியை 8.15 மணிக்கு காவல் நிலையம் கொண்டு வந்து குற்ற எண்.119/2025 ன்படி வழக்கு பதிவு செய்ய நானும் முதல்நிலைக்காவலரும் உதவியாக இருந்தோம். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நான் முதல்விசாரணையில் சொன்னதைதான் சார்பு ஆய்வாளர் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம். உதையாட்சி விளக்கு தேவகோட்டை நகர் காவல் நிலைய ஆள்வரைக்கு உட்பட்ட பகுதி என்றால் தெரியாது. இரகசிய தகவல் வந்துள்ளதாக சார்பு ஆய்வாளர் என்னிடம் சொன்னார். மதுவிலக்குக்கு என்று தனிபிரிவு உள்ளது என்றால் ஆமாம். நாங்கள் எதிரியை கைது பண்ணிய இடத்தில் இருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவிற்கு மதுபான கடை இருந்தது என்றால்

சரிதான். நாங்கள் எதிரியை கைது பண்ணிய நாளுக்கு முதல்நாள் அரசு விடுமுறை இல்லை, மறுநாள் அரசு விடுமுறையா என்று தெரியாது. எதிரியை கைது பண்ணிய இடம் எப்போதும் வாகன நெரிசலான இடம் என்றால், அதிக நெரிசல் இருக்காது ஓரளவு கவனமாகப் போக வேண்டிய பகுதி. எதிரி வைத்திருந்த சாக்குப்பையை சார்பு ஆய்வாளர்தான் வாங்கி காண்பித்தார். எதிரி வைத்திருந்த பையை நாங்கள் 3 பேரும் ஒரே நேரத்தில்தான் பார்த்தோம். எதிரி தச்சுவேலை பார்த்துவருகிறார் என்றும் சாக்கில் தச்சுவேலைக்கான பொருட்கள்தான் இருந்தது என்றும் புள்ளிவிபரத்திற்காக வேண்டும் என்றே எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகில் கடை உள்ளது என்றால் சரிதான். சம்பவ நாளுக்கு மறுநாள் விடுமுறை இல்லை என்றும் அதனால் எதிரிக்கு மது வாங்கி விற்ற வேண்டும் என்ற அவசியம் இல்லை என்றும் புள்ளிவிபரத்திற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்த இடம் தாலுகா காவல் நிலையத்திற்குட்பட்ட இடம் இல்லை என்றும் வேண்டும் என்றே எதிரி மீது வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.